## டிசம்பர் – 25 – செவ்வாய்

### கிறிஸ்து பிறப்புப் பெருவிழா

"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" லூக்.1:45

---

**முதல் வாசகம் : ஏசாயா 9 : 1 – 6**

முற்காலத்தில் செபுலோன் நாட்டையும், நப்தலி நாட்டையும் ஆண்டவர் அவமதிப்புக்கு உட்படுத்தினார் பிற்காலத்திலோ, பெருங்கடல் வழிப்பகுதி யோர்தானுக்கு அப்பாலுள்ள நிலப்பரப்பு, பிற இனத்தார் வாழும் கலிலேயா நாடு ஆகிய பகுதிகளுக்கு மேன்மை வரச்செய்வார். காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது. ஆண்டவரே! அந்த இனத்தாரைப் பல்கிப் பெருகச் செய்தீர் அவர்கள் மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தினீர் அறுவடை நாளில் மகிழ்ச்சியுறுவது போல் உம் திருமுன் அவர்கள் அகமகிழ்கிறார்கள் கொள்ளைப் பொருளைப் பங்கிடும் போது அக்களிப்பதுபோல் களிகூர்கிறார்கள். மிதியான் நாட்டுக்குச் செய்தது போல அவர்களுக்குச் சுமையாக இருந்த நுகத்தை நீர் உடைத்தெறிந்தீர் அவர்கள் தோளைப் புண்ணாக்கிய தடியைத் தகர்த்துப் போட்டீர் அவர்களை ஒடுக்குவோரின் கொடுங்கோலை ஒடித்தெறிந்தீர். அமளியுற்ற போர்க்களத்தில் போர்வீரன் அணிந்திருந்த காலணிகளும், இரத்தக் கறைபடிந்த ஆடைகள் அனைத்தும் நெருப்புக்கு இரையாக எரிக்கப்படும். ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார் ஓர் ஆண்மகவு நமக்குத் தரப்பட்டுள்ளார் ஆட்சிப்பொறுப்பு அவர் தோள்மேல் இருக்கும் அவர் திருப்பெயரோ "வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, அமைதியின் அரசர்" என்று அழைக்கப்படும்.

**பதில்பாடல் :** உலகெங்குமுள அனைத்தும் கடவுள் அருளிய விடுதலையைக் கண்டனர்.

**இரண்டாம் வாசகம் : தீத்து 2 : 11 - 14**

மனிதர் அனைவருக்கும் மீட்பராம் கடவுளின் அருள் வெளிப்பட்டுள்ளது. நாம் இறைப்பற்றின்மையையும்இ உலகுசார்ந்த தீய நாட்டங்களையும் மறுத்துக் கட்டுப்பாட்டுடனும்இ நேர்மையு டனும்இ இறைப்பற்றுடனும் இம்மையில் வாழ இவ்வருளால் பயிற்சி பெறுகிறோம். மகிழ்ச்சியோடு எதிர்நோக்கியிருப்பது நிறைவேறும் எனக் காத்திருக்கிறோம். நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படப் போகிறது. அவர் நம்மை எல்லா நெறிகேடுகளிலிருந்தும் மீட்டு, நற்செயல் களில் ஆர்வமுள்ள தமக்குரிய மக்களாகத் தூய்மைப் படுத்தத் தம்மையே ஒப்படைத்தார்.

**நற்செய்தி : லூக்கா 2 : 1 - 14**

அக்காலத்தில் அகுஸ்து சீசர் தம் பேரரசு முழுவதும் மக்கள் தொகையைக் கணக்கிடுமாறு கட்டளை பிறப்பித்தார். அதன்படி சிரிய நாட்டில் குரேனியு என்பவர் ஆளுநராய் இருந்தபோது முதன்முறையாக மக்கள் தொகை கணக்கிடப்பட்டது. தம் பெயரைப் பதிவுசெய்ய அனைவரும் அவரவர் ஊருக்குச் சென்றனர். தாவீதின் வழிமரபினரான யோசேப்பும், தமக்கு மண ஒப்பந்தமான மரியாவோடு, பெயரைப் பதிவு செய்ய, கலிலேயாவிலுள்ள நாசரேத்து ஊரிலிருந்து யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்குச் சென்றார். மரியா கருவுற்றிருந்தார். அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாவுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார். அப்பொழுது அப்பகுதியில் உள்ள வயல்வெளியில் இடையர்கள் தங்கி இரவெல்லாம் தங்கள் கிடையைக் காவல் காத்துக்கொண்டிருந்தார்கள். திடீரென்று ஆண்டவருடைய தூதர் அவர்கள்முன் வந்து நின்றபோது ஆண்டவரின் மாட்சி அவர்களைச் சுற்றி ஒளிர்ந்தது மிகுந்த அச்சம் அவர்களை ஆட்கொண்டது. வானதூதர் அவர்களிடம், "அஞ்சாதீர்கள், இதோ, எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காகத் தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார். குழந்தையைத் துணிகளில் சுற்றித் தீவனத் தொட்டியில் கிடத்தியிருப்பதைக் காண்பீர்கள் இதுவே உங்களுக்கு அடையாளம்" என்றார். உடனே விண்ணகத் தூதர் பேரணி அந்தத் தூதருடன் சேர்ந்து, "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக! உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக!" என்று கடவுளைப் புகழ்ந்தது.

**தியானம்:** "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரைப் போற்றுவோம் ஏனெனில் அவர் தம் மக்களை தேடிவந்து விடுவித்து அருளினார்" (லூக்.1:68). உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழாவின் வாழ்த்துக்கள். மனுக்குல மனிதர்களை விடுவிக்க விண்ணக அதிபதி, காண முடியாத அரூபி, கட்புலனாகா கடவுள், மண்ணக மனிதராக, பலவீனமான உடலோடு மனிதர்களை சார்ந்து நிற்கும் பாலகனாக அவனியில் உதித்த உன்னதமான பெருவிழாவை நாம் இன்று கொண்டாடி மகிழ்கின்றோம். கற்பனைக்கு எட்டாத கடவுளின் அன்பு காணக்கிடக்கும் எளிய வடிவில் பாலன் இயேசுவின் உருவில். மக்களுக்கெல்லாம் மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தி ஆண்டவர் இயேசுவின் பிறப்புச் செய்தி. மாட்டுக் கொட்டகையில் பிறந்து ஏழை எளியவர்களின் கடவுளாக தன்னை அறிமுகம் செய்து தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர். "தடுக்கிவிழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகிறார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கி விடுகின்றார்" (திபா.145:14). "ஆண்டவர் எளியோருக்கு ஆதரவளிக்கின்றார்" (திபா.147:6). பாவத்திலும் பலவீனத்திலும் வாழும் மனிதர்களை கைதூக்கிவிட அவர்களைப்போன்ற மனித உடலை ஏற்று அதனுடைய அத்துனை பரிமாணங்களிலும் பங்கு கொண்டவர் நம் ஆண்டவர் இயேசு. பாவத்தின் விளைவால் இழந்துபோன இறைவனின் அருளை தன்னுடைய இரக்கத்தால் திரும்பப்பெற்றுக்கொடுத்த அதிசய நிகழ்வு இயேசுவின் பிறப்பு. இறை சித்தமும், மனித ஒத்துழைப்பும் சங்கமித்த நிகழ்வு இயேசுவின் பிறப்பு. "அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி உலகிற்கு வந்து கொண்டிருந்தது. ஒளியான அவர் உலகில் இருந்தார் உலகு அவரால்தான் உண்டானது" (யோவா.1:9-10). "இருளிலும் இறப்பின் பிடியிலும் இருப்போர்க்கு ஒளிதரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது" (லூக்.1:78-79). இருளில் உள்ள மனிதர்களுக்கு ஒளி தரும் சுடராக ஆண்டவர் இயேசு உலகத்திலே உதித்தார். ஒளியான இயேசு உதித்ததும் உலகத்தைக் கவ்விக் கொண்டிருந்த பாவ இருள் விலகிச் சென்றது. ஒளியிலே ஒளியில்தான் நம்முடைய உண்மையான அடையாளங்கள் நமக்குத் தெரியவருகின்றது. நாம் யாருக்குச் சொந்தம்? நாம் எங்கிருந்து வந்தோம்? எங்கே சென்று கொண்டிருக்கின்றோம்? என்பதுபோன்ற கேள்விகளுக்கு ஆண்டவர் இயேசுவின் பிறப்பு பதில் நமக்குத் தருகின்றது. வாழ்வின் எதிர்கால நம்பிக்கையை உறுதிசெய்த இயேசுவின் பிறப்பை அனைவரும் கொண்டாடுவோம் பாலன் இயேசுவை ஆராதிப்போம்.